பங்கேற்போம் !　　　உரிமையை நிலைநாட்டுவோம் !

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 02
குரல் : 04

அக்டோபர் 2024 – டிசம்பர் 2024




## நானும் எனது பகுதியும்...

அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# பாராளுமன்றம், சட்டசபை மற்றும் உள்ளாட்சி பிரதிநிகள் குறித்த தகவல்கள்

| வ.எண் | குழந்தைகள் சங்கம் | சட்ட மன்ற தொகுதி | மண்டலம் | வார்டு | மாமன்ற உறுப்பினர் | மண்டல குழுதலைவர் | சட்டமன்ற உறுப்பினர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | திருவொற்றியூர் | 1 | 1 | திரு. சிவகுமார் | திரு.தனியரசு | திரு. KPP.சங்கர் |
| 2 | 5 | ,, | 1 | 2 | திருமதி. கோமதிசந்தோஷ் | ,, | ,, |
| 3 | 9 | ,, | 1 | 3 | திரு.தம்பியா | ,, | ,, |
| 4 | 2 | ,, | 1 | 5 | திரு.சொக்கலிங்கம் | ,, | ,, |
| 5 | 2 | ,, | ,, | 6 | திரு. சாமுவேல்திரவியம் | ,, | ,, |
| 6 | 5 | ,, | ,, | 7 | திரு. கார்த்திக் | .. | ,, |
| 7 | 8 | ,, | ,, | 9 | திரு. உமாசரவணன் | .. | ,, |
| 8 | 3 | ,, | ,, | 10 | திரு.தனியரசு | | ,, |
| 9 | 3 | ,, | ,, | 11 | திரு.சரண்யாகலைவாணன் | ,, | ,, |
| 10 | 3 | ,, | ,, | 14 | திரு.பானுமதிசந்தர் | ,, | ,, |
| 11 | 2 | மணலி | 2 | 16 | திரு.ராஜேந்திரன் | திரு.AV.ஆறுமுகம் | திரு.எஸ்.சுதர்சனம் |
| 12 | 2 | ஆர்.கேநகர் | 4 | 37 | திரு.டெல்லிபாபு | திரு.Uகணேசன் | திருJ.J.எபிநேசர் |
| 13 | 8 | ,, | 4 | 38 | திரு.U.கணேசன் | ,, | ,, |
| 14 | 12 | ,, | 4 | 41 | திருமதி.விமலா | ,, | ,, |
| 15 | 10 | ,, | 4 | 47 | திருமதி.மனிமேகை | ,, | ,, |
| 16 | 6 | ,, | 5 | 53 | திருமதி. வேளாங்கண்ணி | ,, | ,, |
| Total | 83 | 3 | 4 | 16 | | 3 | 3 |

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 02 | குரல் : 04

அக்டோபர் – டிசம்பர் 2024

**ஆசிரியர்கள்**

L. யுவராணி, H.யுவஸ்ரீ

**இணை ஆசிரியர்கள்**

S. ஜிஷ்ணு, K. நிஷாந்த், G. விநாயகமூர்த்தி

**உதவி ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி. P. தமிழ்,
S. லோகேஷ், V. சுஜிதா, S. தங்கவித்யா,
S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**நிருபர்கள்**

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி,
S. ஓவியா, D. ரொபினா, M. ஜெனிலியா
S. தங்கவித்யா, S.சக்தி முருகன்,
R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**ஓவியர்கள்**

C. ஜெகன், S. ராயின்
V. நாகராணி, R. தேவன்

**நிர்வாகம்**

முனைவர்.வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

**ஒருங்கிணைப்பு**

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

**வடிவமைப்பு**

ஆசிரியர் குழு,
D. டான்போஸ்கோ,



**தொடர்பு முகவரி**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு. இராயபுரம்
சென்னை – 600013
**Phone** : 044-42632264
**Mobile** : 9444051529, 8925274527

**மின்னஞ்சல்**

arunodhayaorg@gmail.com

**இணையதளம்**

www.arunodhayacentre.in




# ஆசிரியர் உரை

**உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம் !!**

இதோ உங்கள் கருத்துக்கள் அனைத்தும் அடங்கிய நம் சிட்டெறும்பின் ஐந்தாவது இதழை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்முறை நாம் "**நானும் எனது பகுதியும்**" என்ற சிறந்த தலைப்பை கையில் எடுத்துள்ளோம். நாம் வாழும் இடத்தின் சுற்று சூழல் அங்கு நமக்கு நன்மையை கொடுக்க கூடிய விஷயங்கள், நம் உடலுக்கும், சுற்றுசூழலுக்கும் ஊறுவிளைவிக்கும் விஷயங்கள் நாம் வாழும் பகுதியின் புவியியல் பண்புகள் குறித்து நாம் நன்கு அறிந்து கொள்வது அவசியம். அப்போது தான் நாம் நம்மையும் நாம் வாழும் பகுதியையும் பாதுகாத்து கொள்ள முடியும்.

நீங்கள் அனைவரும் உங்கள் பகுதியை குறித்து நன்கு அறிந்துள்ளீர்கள் என்று உங்கள் கட்டுரைகள் மூலம் என்னால் நன்றாக உணர முடிகின்றது. நம் பகுதிகளின் நிலையை குறித்து மற்ற பகுதி குழந்தைகள் அறிந்து கொள்ளவும், குழந்தைகள் மட்டுமின்றி இந்த இதழை படிக்கும் பெரியவர்களும் நம் பகுதியை குறித்து அறிந்து கொள்ளவும், பகுதியை குறித்து குழந்தைகளின் கருத்துக்கள் என்ன என்பது குறித்து அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது இந்த இதழின் சிறப்பாக உள்ளது.

மேலும் நாம் வாழும் பகுதியை குறித்து விழிப்புணர்வுடன் இருப்பதும் அவசியம், நம் மாநிலம், மாவட்டம், பின் கோட் எண், மண்டலம், வார்டு, பகுதியின் பெயர், தெருவின் பெயர், நம் சட்டமன்ற தொகுதியின் பெயர், சட்டமன்ற உறுப்பினர் பெயர், மாமன்ற உறுப்பினர் பெயர், பகுதித் தலைவர் பெயர் போன்றவை அறிந்து வைத்திருக்க வேண்டும். மேலும் நம் பகுதியில் எத்தனை தெருக்கள் உள்ளது. அரசு நிறுவனங்கள் எத்தனை உள்ளது, என்னென்ன வசதிகள் உள்ளது, என்ன விஷயங்கள் இன்னும் நமக்கு தேவைபடுகின்றது என்பது குறித்த தெளிவுடன் இருத்தல் அவசியம்.

அடுத்து நாம் செய்வது என்ன நண்பர்களே?

ஆம் நம் பகுதியை குறித்து இப்போது நாம் நன்கு அறிந்து கொண்டோம். அங்கு நமக்கு தீங்கு விளைவிக்கும் நிகழ்வுகள் நடக்கும் போது அதனை நாம் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டியது அவசியம். நாம் நம் பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அங்குள்ள இயற்கை வளங்களான மரங்கள், நீர்நிலைகள், நிலத்தடிநீர், காற்று போன்றவை பாதிப்படையாத வண்ணம் நாம் நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களையும் பாதுகாக்க அறிவுறுத்த வேண்டும்.

நாம் அனைவரும் முயற்சி செய்தால் நம் பகுதியை பெரியவர்கள் ஆதரவின் மூலம் நமக்கு பிடித்த வகையில் மாற்ற முடியும். என்ன நண்பர்களே நான் சொல்வது சரிதானே!!

**" வாருங்கள் நாம் ஒன்றிணைவோம்
நமக்கு பிடித்த மற்றும்
பாதுகாப்பான சுற்றுசூழலை
நாம் உருவாக்குவோம்"**



**L. யுவராணி**
11 ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(அக்டோபர் - டிசம்பர் 2024)

## குழந்தைகள் சங்க கூட்டங்கள்

| வரிசை எண் | மாதம் | பேசப்பட்ட கருத்துக்கள் |
|---|---|---|
| 1 | **அக்டோபர்** | ➢ கொடுத்து மகிழுங்கள் திட்டமிடல்<br>➢ குழந்தைகள் சங்க மண்டல அளவு கூட்டங்கள் திட்டமிடல்,<br>➢ செயற்குழு கூட்டம் திட்டமிடல் |
| 2 | **நவம்பர்_** | ➢ மாதிரி மாநாடு குறித்த திட்டமிடல்<br>➢ மாநாடு பொறுப்புகளை செய்தல்,<br>➢ மாநாடு நடத்துதல் குறித்து |
| 3 | **டிசம்பர்–** | ➢ சிட்டெறும்பு புத்தகம் படித்தல்<br>➢ பயிற்சிகள் குறித்து தகவல்கள்<br>➢ மாநாடு மதிப்பீடு<br>➢ அரையாண்டு தேர்வு குறித்த தொடர் கண்காணிப்பு. |

### அக்டோபர் மாத செயல்பாடுகள்

கொடுத்து மகிழுங்கள் செயல்பாடு அக்டோபர் 4,5,8 ஆகிய தேதிகளில் கொருக்குப்பேட்டை, எண்ணூர் மற்றும் இராயபுரம் பகுதியில் நடத்தப்பட்டது. இதில் மிகவும் வறுமையில் உள்ள ஒரு குடும்பத்திற்கு குழந்தைகள் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் வாங்கி கொடுத்தனர். கொருக்குபேட்டை பகுதியில் பணம் வசூல் செய்து சுயஉதவிகுழு உறுப்பினர்களுடன் இணைந்து முதியவர்களை மகிழ்வித்து புத்தாடை மற்றும் மதிய உணவு வழங்கினார்கள் இராயபுரம் பகுதியில் அங்கன்வாடி குழந்தைகளுக்கு விளையாட்டு பொருட்கள் வாங்கி கொடுத்தனர்.

அக்டோபர் 8 அன்று அருணோதயா குழந்தைகள் சங்கத்தை சேர்ந்த குழந்தைகள் ஆல்காட் பள்ளியில் நடைபெற்ற பரத நாட்டிய கலைத் திருவிழாவில் கலந்து கொண்டு பரத நாட்டியம் ஆடி பரிசுகள் பெற்றனர். இதில் 10 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

அக்டோபர் 16, 19 ஆகிய தேதிகளில் மண்டல அளவு கூட்டங்கள் நடத்தப்பட்டு மாநாடு திட்டமிடல்கள் செய்யப்பட்டது. இதில் நான்கு மண்டங்களில் இருந்து 32 குழந்தைகள் கலந்து கொண்டனர்.



அக்டோபர் 25 அன்று குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் 38 வது வார்டில் நடைபெற்றது. இதில் போதை அதிகமாக பயன்படுத்துவது குறித்தும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கைபிரதி மற்றும் ஸ்டிக்கர் தயார் செய்து பெட்டி கடைகளில் ஒட்ட வேண்டும் என்று திட்டமிட்டனர்.

பள்ளி குழந்தைகள் மன்றம் கூட்டம் 6 பள்ளிகளில் நடைபெற்றது. இதில் 150 குழந்தைகள் கலந்து கொண்டனர். பள்ளியில் உள்ள உள்வளங்கள் வெளி வளங்களை கண்டறிந்து திட்டமிடுதல் என்ற தலைப்பில் கூட்டம் நடத்தப்பட்டது.

செயற்குழு கூட்டம் அக்டோபர் 23 அன்று இணைய தளம் வழியாக நடைபெற்றது. இதில் மாநாடு பொறுப்புகளை குறித்து திட்டமிட்டனர்.

## நவம்பர் மாத செயல்பாடுகள்

குழந்தைகள் சங்க மாநாட்டின் கண்காட்சிக்கு தேவையான வடிவமைப்புகளை குழந்தைகள் பகுதியளவில் செய்தனர்.

மாதிரி மாநாடுகள் நவம்பர் 15,16,19 ஆகிய தேதிகளில் மண்டல அளவில் நடைபெற்றது. இதில் குழந்தைகள் மாநாடு கருத்தை ஒட்டிய கலை நிகழ்ச்சிகள், கோரிக்கைகள் வாசித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

நவம்பர் 24 அருணோதயா குழந்தைகள் சங்க மாநாடு மற்றும் உலக குழந்தைகள் தினவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதில் கண்காட்சி, கலை நிகழ்வுகள். கோரிக்கைகள் சமர்பித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. இதில் ஆர்.கே நகர் தொகுதி M L A, இராயபுரம் தொகுதி M L A, அருணோதயா இயக்குனர், சென்னை சுற்றுசூழல் ஆய்வாளர், அருணோதயா பணியாளர்கள் மற்றும் 400 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

நவம்பர் மாதம் போதை விழிப்புணர்வு தலைப்பில் சிட்டெறும்பு புத்தகம் அனைத்து குழந்தை சங்கங்களுக்கும் கொடுக்கப்பட்டது. குழந்தைகள் படித்து மகிழ்ந்தனர். புத்தகத்தில் கட்டுரை எழுதிய குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள் படித்து மகிழ்ந்தனர், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவு கொடுக்கும் ஆதரவாளர்களுக்கு சிட்டெறும்பு புத்தகம் வழங்கப்பட்டது.

## டிசம்பர் மாத செயல்பாடுகள்

டிசம்பர் 27 அன்று சமூக ஊடகக்குழு திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இதில் 19 குழந்தைகள் கலந்து கொண்டனர். கதை எழுதுதல், ஸ்க்ரீன் பிளே, போட்டோகிராபி, எடிட்டிங், குறும்படம் எடுத்தல் போன்றவை கற்று கொடுக்கபட்டது. குழந்தைகள் கதைகளை உருவாக்கி அதனை குறும் படமாக படப்பிடிப்பு செய்தனர்.

டிசம்பர் 28 அன்று குழந்தை பத்திரிக்கையாளர்கள் திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் 20 குழந்தைகள் கலந்து கொண்டனர். பத்திரிக்கையின் வரலாறு, புத்தக வடிவமைப்பு, செயல்முறை விளக்கமாக கணினியில் புத்தக வடிவமைப்பு கற்றுக் கொண்டனர்.






**K. ரித்திகா**
12 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்



# நானும் என் பகுதியும்

**விஷால்:** அண்ணா, அண்ணா உங்களிடம் நம் பகுதியை குறித்து சில விஷயங்கள் பேச வேண்டும் அண்ணா என்னிடம் பேசுவீர்களா?

**பகுதியில் வசிப்பவர்:** தம்பி என்ன கேட்க வேண்டுமோ கேள்! தெரிந்தவரை நான் பதில் சொல்கின்றேன்.

**விஷால்:** அண்ணா' நானும் என் பகுதியும்' இதைப் பற்றித் தான் அருணோதயா குழந்தைகள் சங்கம் நடத்தும் சிட்டெறும்பு பேசுது புத்தகத்தில் எழுதுவதாக முடிவெடுத்துள்ளோம். அதனால நம்ம எண்ணூர் பகுதியை குறித்து எனக்கு தெரியாத விஷயங்கள் உங்களுக்கு தெரிந்தால் கூறுங்கள் அண்ணா.

**பகுதியில் வசிப்பவர்:** தம்பி என்ன விஷயங்கள் நீ கேட்கின்றாய் சொல்.

**விஷால்:** நம் பகுதியின் பாரம்பரியம், நடக்குற நல்லது கெட்டது பற்றி, அதுக்கப்புறம் நம்ம பகுதியில ஏற்பட்டு இருக்கிற மாற்றங்கள் பற்றி சொல்லுங்கள் அண்ணா!!

**பகுதியில் வசிப்பவர்:** எண்ணூர் என்றாலே ஞாபகத்தில் வருவது கடல். கடலும் கடல் சார்ந்த இடங்களும் தான் நெய்தல் நிலம் என்று சொல்லுவார்கள். இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் மீன் பிடிதொழில் தான். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கிறதும், அதை மீன் சந்தையில் விற்பனை செய்கிறதும் போன்ற வேலைகள் செய்றாங்க. ஆண்கள் கடலில் மீன் பிடிப்பதும், பெண்கள் அதை சந்தையில் விற்பதும் வழக்கமாகும். மீன் ஏற்றுமதி கூட இங்கு நடைபெறுகிறது .மேலும் எண்ணூர் என்றாலே இங்குள்ள துறைமுகங்கள், தொழிற்சாலைகளும் நமக்கு நினைவுக்கு வரும்.

**விஷால்:** எண்ணூரில் உள்ள பாரம்பரியமான விஷயங்களை குறித்து சொல்லுங்கள் அண்ணா!

**பகுதியில் வசிப்பவர்:** முன்னாடியெல்லாம் சொந்தமாக பிடிக்கும் மீன்களை மட்டுமே விற்பார்கள். விலை கொடுத்து வாங்கி விற்க மாட்டார்கள். எந்த பிரச்சனையானாலும் ஊர் பஞ்சாயத்து மூலம் தீர்வு காணுவார்கள். காவல் துறை ஊருக்குள் நுழைய தடை விதிப்பார்கள், ஊர் பொதுக் கூட்டம் நடத்துவார்கள். அதில் ஆண்கள் மட்டும் கலந்து கொண்டு ஊர் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவார்கள். மீனவர்களுக்கு உள்ளேயே திருமணங்கள் நடத்தப்படும். பெண்கள் அதிகம் படிக்கக் கூடாது, மீன் விற்பதை தவிர வேறு வேலைக்கு செல்ல கூடாது என்ற கட்டுபாடுகள் இருந்தன. அவை இப்போது சிறிய அளவிற்கு மாற்றம் அடைந்துள்ளது.

**விஷால்:** ஆனால் அதுல ஒரு ட்விஸ்ட் இருக்கு!! எண்ணூர் சுற்றுச்சூழல் சிவப்பு பகுதின்னு சொல்றாங்க. ஏன்னா இங்க இருக்கும் தொழிற்சாலைகள் சுற்றுசூழலுக்கும், மக்களுக்கும் பாதிப்பு தரக்கூடியது என்று மாசு கட்டுப்பாட்டு வாரியம் சொல்லி இருக்கு. இதனால நம் மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும், மீனவர்கள் தங்கள் பாரம்பரிய தொழிலான மீன் பிடிக்கும் தொழிலை விட்டு வேறு வேலைக்கு செல்லும் நிலை கண்டிப்பாக வரும் என்று சொல்கின்றனர் அண்ணா!!

**பகுதியில் வசிப்பவர்:** அந்த நிலை வரக் கூடாது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் மக்களை காப்பது அரசின் கடமை. மக்களின் கடமையும்.

**விஷால்:** நன்றி அண்ணா நீங்கள் சொன்ன தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**S. விஷால்**
12 ஆம் வகுப்பு, எண்ணூர்





# சுற்றுச்சூழலை பாதிக்காத தொழிற்சாலைகளை வரவேற்போம்

தொழிற்சாலை நம்வாழ்வில் முக்கிய இடத்தை வகிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது. நாம் காலில் அணியும் செருப்பு முதல் தலையில் உள்ள முடியை வெட்ட பயன்படுத்தப்படும் கத்திரிக்கோல் வரை நாம் அனைவரும் பயன்படுத்தும் பொருட்களை தயாரிக்கும் இடம் தொழிற்சாலை ஆகும். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியினால் ஒவ்வொரு நாளும் அறிவியல் கண்டுபிடிப்புகள் நம்வாழ்வை உயர்த்த பங்காற்றுகின்றது. அதே நேரம் பல விளைவுகளும் ஏற்படுகின்றது. அவற்றை பற்றி இந்த கட்டுரையில் காண உள்ளோம்.

தொழிற்சாலை என்றால் என்ன? என்பதை பார்க்க வேண்டியது அவசியம் ஆகும் .தொழிற்சாலை என்றால் எந்திரத்தின் உதவியால் வணிகப் பொருள்கள் பெரும் எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்படும் கட்டடம் அல்லது கட்டடங்களின் தொகுதி ஆகும்.

தொழிற்சாலை என்பது ஏதோ ஒரு வகையில் நமக்கு பயனுள்ளவையாக இருந்தாலும் பல வகையில் நமக்கு தீங்காக மாறுவதை நம்மால் பார்க்க முடிகிறது.

தொழிற்சாலையில் இருந்து வரும் புகையால் நீர், நிலம், காற்று ஆகியன மாசுபடுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தொழிற்சாலை புகையால் நிறைய மக்கள் சுவாசிக்க முடியாமல் இறந்து விடுகிறார்கள். தொழிற்சாலைகள் மிகவும் முக்கியமானவை ஏனெனில் அவை மக்களுக்கு வேலைகளை உருவாக்குகின்றன. மூலப்பொருட்களுக்கான தேவையைத் தூண்டுகின்றன மற்றும் புதுமைகளை வளர்க்கின்றன எனவே சுற்றுசுழலை பாதிக்காத தொழிற்சாலைகளை வரவேற்ப்போம்.



**S. ரிஸ்வான் சரீப்**
9 ஆம் வகுப்பு. எண்ணூர்

# எனது முதல் மேடை

என் பெயர் க.ஷர்மிளா நான் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயலாளராக இருக்கின்றேன். அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு மாநாடு மற்றும் உலக குழந்தைகள் தினவிழா **காலநிலை மாற்றமும் குழந்தைகள் எதிர்காலமும் மாநாடு 2024,24**ஆம் தேதி நவம்பர் மாதம் நடைபெற்றது. இதில் முதல் நிகழ்வாக டாக்டர் வர்ஜில் டி சாமி அம்மா அவர்களும் குழந்தைகள் சங்கத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகிய நான் அனைவரும் குத்து விளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தோம். இது எனக்கு பெரும் இன்ப அதிர்ச்சி. பிறகு செயலாளரை மேடையில் அமர சொன்னார்கள். அப்போது நான் வானத்தையே தொட்ட அளவிற்கு ஆனந்தத்தில் இருந்தேன். நான் மற்ற குழந்தைகளின் சார்பாக மேடையில் உட்காரும் போது ரொம்ப சந்தோசமாக இருந்தேன்.

மேலும் திருவொற்றியூர் பகுதி குழந்தைகள் ஆண்டு அறிக்கையை குறும்படமாக எடுத்தோம். ஒரு வருடம் முழுவதும் நாங்கள் செய்த செயல்பாடுகளைக் கூறினோம். குறும்படம் மாநாட்டில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. குறும்படம் பார்ததபின் ஓராண்டில் இவ்வளவு நல்ல விஷயங்களை செய்து இருக்கின்றோம் என்று ரொம்ப வியப்பாக இருந்தது. மாநாட்டிற்கு வந்த குழந்தைகள் என்னை கூப்பிட்டு குறும்படம் நல்லா இருந்துச்சுன்னு சொன்னாங்க. இது மட்டும் இல்லாமல் நான் மேடையில் ஏறி கோரிக்கை வாசித்தேன். அன்று நாள் முழுக்க நான் பாராட்டுகளையும், மகிழ்ச்சியையும் பெற்றேன். மற்ற குழந்தைகளுக்கு முன் உதாரணமாக நான் இருந்ததாக நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு இவ்வளவு பெரிய வாய்ப்பு கொடுத்த அருணோதயா குழந்தைகள் சங்கத்திற்கு நன்றி.



**K. சர்மிளா**
11 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்

# மாற்றத்தை நோக்கி

எண்ணூரில் உள்ள ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் பள்ளி முடிந்து வீட்டிற்க்கு வந்து கொண்டு இருந்தனர். அனீஸ், கௌதம் என்ற மாணவர்கள் பேசிக் கொண்டே வந்தனர்.

**அனீஸ்:** டேய் கௌதம் வாடா எங்க வீட்டீற்கு ! ப்ரீ பயர் விளையாடலாம்

**கௌதம்:** வேணாம்டா நம்ம கிரவுண்ட்ல போய் கபடி விளையடாலாம்.

**அனீஸ்:** டேய் என்னடா சொல்ற? இந்த தொழிற்சாலை புகைசூழ்ந்த சுற்றுசூழலில் விளையாடக் கூடாது என்று அம்மா சொல்லியுள்ளார்கள்!

**கௌதம்:** சரிடா நான் வீட்டுக்குச் சென்று டிரஸ் மாத்திட்டு வரேண்டா.

**அனீஸ்:** சரிடா.

**கௌதம்:** நான் வந்துட்டேன் வாடா விளையடாலாம்.

(கௌதம், அனீஸ் இருவரும் விளையாடிக் கொண்டிருக்கையில் தாத்தா வருகிறார்)

**தாத்தா** இருவரும் வெளியே சென்று விளையாடலாமே! ஏன் எப்போதும் போன்லேயே விளையாடுரிங்க.

**அனீஸ்:** தாத்தா வெளியே காற்று மாசுபாடு, புகை அதிகமாக உள்ளது என்று அம்மா வீட்டிலேயே விளையாட சொன்னார்கள்.

**தாத்தா** ஆமாம் நான் சின்ன பையனாக இருக்கும் போது கபடி, ஒடிப் பிடித்தல் போன்ற விளையாட்டுக்களை நண்பர்களுடன் விளையாடுவேன். பக்கத்தில் உள்ள கொசஸ்தலை ஆற்றில் நீச்சல் அடித்து மகிழ்ச்சியாக விளையாடுவோம் அப்போது பகுதி சுத்தமாகவும் மனிதருக்கு தீங்கு விளைவிக்காத சூழல் இருந்தது. இப்போது உள்ள குழந்தைகளுக்கு அந்த சூழல் தான் இல்லையே!!

**அனீஸ்:** எங்களால் என்ன செய்ய முடியும். பெரியவர்களே ஒன்றும் செய்ய முடியவில்லை.


**கௌதம்:** எங்கள் குரலை யார் கேட்பார்கள். சிறுவர்கள் தானே என்று ஏளனமாக நினைப்பார்கள்.

**தாத்தா** குழந்தைகளால் முடியாதது ஒன்றும் இல்லை. குழந்தைகளாகிய நீங்கள் எல்லாம் ஒன்றிணைந்து உங்கள் பகுதிக்காக குரல் கொடுக்க வேண்டும். உங்கள் இயற்கை வளங்களை நீங்கள் கையகப்படுத்த வேண்டும். குழந்தைகள் கூறினால் அரசு மற்றும் பெற்றோர்கள் கேட்பார்கள்.

**அனீஸ்:** சரி தாத்தா எங்கள் குழந்தைகள் சங்கத்தில் நாங்கள் பேசி முடிவேடுக்கிறோம் நன்றி தாத்தா.



**K. ஜிஷ்ணு**
9 ஆம் வகுப்பு, எண்ணூர்



# மாற்றம்

நான் இருக்கும் பகுதி சுனாமிகுடியிருப்பு. இந்தப் பகுதி நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டி கொடுத்த குடியிருப்பு. ஆனால் இங்கு பல பிரச்சனைகள் உள்ளது. குப்பைகள், கால்வாய் அடைப்பு, தண்ணீர் பிரச்னை, அச்சம் இன்னும் இதர பிரச்சனைகள் உள்ளது, இந்த பிரச்சனைகள் தொடர்ந்து இருந்தால் குழந்தைகள் வாழ்க்கை நாசமாகிவிடும். இந்நிலையை மாற்ற குழந்தைகளாகிய நாம் முயற்சி செய்ய வேண்டும்.



**C. அனுஷ்கா**
9 ஆம் வகுப்பு. எண்ணூர்

- குப்பைகளை குப்பை தொட்டியில் போடுவோம்!! நோய்கள்,பூச்சிகள், நாற்றம் இவற்றிலிருந்து விடுபடுவோம்.
- போதை பழக்கத்தை விரட்டி அடிப்போம், விழிப்புணர்வு கொடுப்போம்.
- பெண் குழந்தைகள் கல்வி மற்றும் பெண்கள் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு கொடுப்போம்.

**"குப்பையில்லா பகுதியை உருவாக்குவோம், போதையில்லா பாதையை உருவாக்குவோம், பெண்களை தைரியப்படுத்துவோம் நம் பகுதியை மாற்றுவோம்"**

# என் திறனை வளர்த்துக் கொள்ள மேலும் ஒரு வாய்ப்பு இதழியல் பயிற்சி

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 28 ஆம் நாள் சிட்டெறும்பு பேசுது இதழாசிரியர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை திரு. போஸ் சார் அவர்களும், திருமதி. செல்வி மேடம் அவர்களும் வழி நடத்தினார்கள்.

ஒருநாள் போனதே தெரியவில்லை. பயிற்சி மிகவும் சுவாரசியமாக இருந்தது. முதலில் மூன்று குழுக்களாக பிரித்து ஒரு பத்திரிக்கையில் செய்திகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று போஸ் சார் கூறினார். நாங்கள் கற்று கொண்டவற்றை பயன்படுத்தி ஒரு சிறிய செய்தித்தாளை உருவாக்கினோம். பிறகு அவற்றை பகிர்ந்து கொண்டோம். இந்த செயல்பாடு எங்கள் கற்பனை திறனை தூண்டும் வண்ணம் இருந்தது.



இணையதளம் மூலம் எவ்வாறு புத்தகம் வடிவாக்கம் செய்வது என்று கணினி மூலம் கற்று கொடுத்தது எங்களுக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. அடுத்த புத்தகத்தை நாங்களே கணினியில் வடிவமைக்க திட்டமிட்டுள்ளோம். மேலும் செல்வி மேடம் அச்சுக்கலையின் வரலாறு, செய்தித்தாள்களின் வகைகள், அம்சங்கள், பணிகள், குறித்தும் நடத்தியது சிறப்பாக இருந்தது.

மொத்தத்தில் இந்த பயிற்சி எங்கள் ஆர்வத்தை மேலும் தூண்டும் விதமாக அமைந்தது. இறுதியாக அடுத்த இதழ்" நானும் எனது பகுதியும்" என்ற தலைப்பில் எழுதலாம் என்று முடிவு எடுத்தோம். சிறந்த பத்திரிக்கை ஆசிரியராக ஆக வேண்டும் என்ற என்னுடைய கனவை நோக்கி நான் பயணிக்கின்றேன்.



**T. பிரித்திவ்ராஜ்**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

# கவர் ஸ்டோரி

சிறப்புமிக்க சென்னையின் வடதிசையில் அமைந்துள்ள பகுதி வடசென்னை என்று அழைக்கப்படுகிறது. ஆங்கிலோ இந்தியர் குடியிருப்பான இராயபுரம், வரலாற்று சிறப்புமிக்க திருவொற்றியூர், கடற்கரை பகுதியான எண்ணூர், மாதவரம்,. மணலி போன்ற பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். தண்டையார்பேட்டை, கொருக்குபேட்டை பகுதிகள் வடசென்னையின் மையப் பகுதியாக உள்ளது.

> “சென்னை வடசென்னை வந்தாரை வாழ வைக்கும் வடசென்னை”

மண்டலம்-1 திருவொற்றியூர் மண்டலம்-2 மணலி, மண்டலம்-3 மாதவரம், மண்டலம்-4 தண்டையார்பேட்டை, மண்டலம்-5 இராயபுரம் போன்ற ஐந்து மண்டலங்கள் வடசென்னையில் உள்ளது. 63 வார்டுகள் வடசென்னையில் உள்ளது.

இராயபுரத்தில் அமைந்துள்ள தென் இந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம், காசிமேட்டு பகுதியில் அமைந்துள்ள மீன்பிடி துறைமுகம், திருவற்றியூரில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க கோவில்கள், எண்ணூரில் அமைந்துள்ள கடற்கரைகள் போன்றவை சிறப்பு மிக்க வையாக கருதப்படுகிறது.

எங்கள் வடசென்னை பகுதி என்றாலே நினைவுக்கு வருவது நெருக்கடியான தெருக்கள், தெருவோர சாப்பாடு கடைகள், குறுக்கும் நெடுக்கும் ஓடி விளையாடிக் கொண்டிருக்கும் மழலைகள், மூலைக்கு ஒரு கோவில்கள், விடுமுறை நாட்களில் கிடைக்கும் இடங்களில் கிரிக்கெட் விளையாடும் இளைஞர்கள், ஷேர் ஆட்டோக்கள், மெட்ரோ இரயில் நிலையம் அனைத்திலும் அதிகாலை முதல் இரவு வரை பொங்கி வழியும் மக்கள் கூட்டம் என்று எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருப்பவர்கள் வடசென்னை மக்கள். இங்கு குடிசை தொழில்கள், மீன்பிடி தொழில், வீடுகட்டும் தொழில், சில்வர் பாத்திரம் தயாரிக்கும் தொழில், தச்சுவேலை மற்றும் கூலி வேலைகள் செய்து, வருமானம் குறைவாக இருந்தாலும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு மத ஒற்றுமையுடன் திருவிழாக்கள், பண்டிகைகள் போன்றவற்றை விமரிசையாகக் கொண்டாடி மகிழ்வர். தமிழ் நாட்டின் மற்ற மாவட்டங்களில் இருந்து வந்து வடசென்னையில் பிழைத்து வருபவர்களும் உண்டு.

இவ்வளவு சிறப்பு மிக்க வடசென்னை மற்றவர்களின் பார்வையில் குற்றம் செய்பவர்களின் கூடாரம் என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. சினிமா, பத்திரிக்கையாளர்களின் மிகைபடுத்திய செய்திகள், சமூக ஊடகங்களின் மூலம் இவ்வாறு தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகிறது.

இந்நிலை மாற வேண்டும்! வடசென்னையில் வாழும் மனிதர்களுக்கும் ஆழகான மனசிருக்கும் என்பதை நாம் அனைவருக்கும் புரிய வைக்க வேண்டும்.

**V. சுஜிதா**
11 ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை





# செயற்கைப்பேரிடர்

இயற்க்கைப் பேரிடர் நாம் கேள்வி பட்டிருக்கின்றோம். ஆனால் மனிதனின் மெத்தனப் போக்கால் ஏற்பட்ட ஒரு பேரிடர் பற்றி தான் இப்போது நான் சொல்லப்போகின்றேன். எண்ணூர் பகுதியில் 2023 வருடம் ஒரு அதிர்ச்சி தரும் சம்பவம் நடந்தது உங்களுக்கு தெரிந்ததே!! டிசம்பர் மாதம் 26ஆம் தேதி நள்ளிரவில் ஒருகுரல். எழுந்திருங்கள் அனைவர் உயிருக்கும் ஆபத்து என்று உரத்த குரலில் அனைவர் வீட்டுக்கதவும் தட்டப்பட்டது. மக்களுக்கு ஒன்றும் புரியவில்லை சுனாமி வருது ஓடுங்க அப்படின்னு கூவிக் கொண்டே தங்கள் வீடு, வண்டி எல்லாத்தையும் விட்டுட்டு தங்கள் உயிரும், குழந்தைகளும் தான் முக்கியம் என்று மக்கள் ஓட ஆரம்பிச்சாங்க. நானும் என் அப்பாவின் கையை பிடித்துக் கொண்டு அழுது கொண்டே ஓடினேன். கிடைத்த வண்டிகளில் ஏறி அங்கிருந்து தப்பிச் சென்றோம்.

பிறகு தான் தெரிந்தது அது சுனாமியல்ல, கோர மண்டல் தொழிற்சாலையில் இருந்து அமோனியா வாயு வெளியேறியதால் ஏற்பட்ட ஆபத்து என்று புரிந்தது.

அந்த அமோனியா வாயு வெளியேறியதால் சிலருக்கு தொண்டை எரிச்சல் மூச்சுத்திணறல், வாந்தி போன்றவை வர ஆரம்பித்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். எனக்கும் தொண்டை எரிச்சல் அதிகமானது. நாங்கள் எல்லாம் செத்து விடுவோம் என்ற பயம் ஆரம்பித்தது . எங்கள் ஊரில் உள்ள அனைவர் கண்ணிலும் பயம். சிலர் மயங்கி விழுந்தனர். மருத்துவமனையில் சிகிச்சைக்குப்பின் மூன்று நாட்கள் கழித்து தான் வீட்டுக்கு வந்தோம். அதற்ககுப் பிறகும் பயம் விட்டுப் போகவில்லை செத்து பிழைத்து வந்தது போல இருந்தது.

எண்ணூர் என்ன தான் சிவப்பு பகுதி இடத்தில் இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பெரியவர்கள் உதவியுடன் சுற்றுசூழல் மாசுபாடு அற்ற பகுதியாக மாற்ற நாம் முயற்சி செய்வோம். நம் பகுதி நம் பொறுப்பு நம் எதிர்காலம் நம் கையில்.



**S. விஷால்**
12 ஆம் வகுப்பு, எண்ணூர்



# இராயபுரம் சிறப்புகள்

இராயபுரம் தமிழ்நாட்டின் வடசென்னை பகுதியில் சென்னை மாநாகராட்சியின் 5 வது மண்டத்தில் அடங்கிய ஒரு பகுதியாகும். சென்னையின் பழமையான இடங்களில் இதுவும் ஒன்று. பாரிமுனை, சென்னை துறைமுகம் ,மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் போன்ற முக்கியமான இடங்களுக்கு மிக அருகில் உள்ளது.

அடிப்படை சுகாதார வசதி இல்லாத காலத்தில் மகளிர் மகப்பேறு மருத்துவமனையான ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனையை இராஜா சர் இராமசாமி முதலியார் என்பவர் கட்டினார்.



இராயபுரத்தில் உள்ள காசிமேடு மீன்பிடி துறைமுகம் மிகவும் பிரசித்தி பெற்ற மீன் பிடி துறைமுகமாகும். மிகவும் பழமை வாய்ந்த தென் இந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இங்கு உள்ளது. இந்நிலையம் 1856 ஆண்டு துவங்கப்பட்டது. இப்பகுதி சோழர்களின் காலத்தில் நன்கு அறியப்பட்ட பகுதியாக இருந்தது. தென்பகுதியை ஆண்ட இராயர் மன்னர்களின் நினைவாக இப்பகுதி முதலில் இராயபுரம் என்று அழைக்கப்பட்டது. மேலும் இந்த பகுதியில் குடியேறிய ஆங்கிலேயர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் இராயர்கள் என்று அழைக்கப்பட்டனர் இராயர்கள் வாழ்ந்த பகுதி ஆதலால் இராயபுரம் என்று அழைக்கபடுகிறது.

**R. ஹரிணி**
8 ஆம் வகுப்பு. இராயபுரம்



# சிப்பிகளை காணவில்லை

எங்கள் ஏரியா மிகவும் அழகானது !! இயற்கை எழில் கொஞ்சும் கடல், ஆறும் எரியும் கலக்கும் அழகான முகத்துவாரம், கடல் அலைகளின் ஓசை, குளிர்ச்சியான காற்று, கடலில் தூரத்து கப்பல், படகு போன்றவை கண்ணைக்கவரும் வண்ணம் இருந்தது. இப்போது சிறுது சிறிதாக பொலிவிழந்து மக்கள் வாழ தகுதியில்லாத சிகப்பு பகுதியாக எண்ணூர் மாறியுள்ளது வருத்தத்தைத் தரக்கூடியதாக உள்ளது.

கடலில் இரசாயனக் கழிவு, கழிவுநீர், சுடும் பாய்லர் தண்ணீர் போன்றவை கலப்பதால் கடலில் இருக்கும் சிறு சிறு உயிரினங்கள் கூட இறந்து போய் விடுகிறது. கடலில் இருந்து சிப்பிகள், முத்துக்கள், நத்தை, சங்கு இவை போன்ற பொருட்கள் எதுவுமே பார்க்க முடியவில்லை, கடல் அலை வரும்போது எதுவுமே கிடைக்கவில்லை.

எங்கள் பொழுது போக்கு கடல் ஓரத்தில் சென்று அலைகளில் வரும் சிப்பிகள், சங்கு போன்றவற்றை சேகரிக்கும் விளையாட்டு விளையாடுவோம். இப்போது அவை ஏதும் அலைகளில் வருவதில்லை. காரணம் கடலில் இரசாயன நச்சுக்கள் கலக்கப்படுவதினால் தான். இதனால் எங்கள் மீனவ சமுதாயமே பாதிக்கப்பட்டுள்ளது கடலில் வரும் மீன்களும் இறந்து போகின்றது.,

அங்குள்ள உரத் தொழில்சாலைகள் மூலம் வெளியேற்றப்படும் நச்சுப்புகை காற்று மாசுபாட்டை ஏற்படுத்தி வருகிறது. விளையாட்டு மைதானத்திலும் எங்களால் விளையாட முடிவதில்லை .இந்த நிலைஎப்போது மாறும்??

**N. கிரிதிஷா**
9 ஆம் வகுப்பு, எண்ணூர்



# உலகை அச்சுறுத்தும் மாசுபாடுகள்

### காற்று மாசுபாடு

தொழிற்சாலைகள் காற்றில் நச்சு வாயுக்களை வெளியே விடுகின்றன. இது நாள்பட்ட சுவாச நோய், நுரையீரல், புற்றுநோய் மற்றும் இதய நோய்களை ஏற்படுத்திவருகின்றன.

### நீர் மாசுபாடு

தொழிற்சாலைகள் சட்டவிரோதமாக அசுத்தமான நீர், இரசாயனங்கள், உலோகங்கள் அல்லது கதிரியக்க பொருட்களை நீர் நிலைகளில் விடுவதால் நீர் மாசுபாடு அடைகிறது.



**A. சக்தி ராஜன்**
9 ஆம் வகுப்பு, எண்ணூர்

### மண் மாசுபாடு

தொழிற்சாலைகள் தொழிற்சாலை கழிவுகளை நிலங்களில் கொட்டுவதால் அவை மண்ணில் ஊறி மண்வளத்தை பாதிக்கின்றது.

இந்த மாசு பாடுகளால் உலகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. தொழிற் சாலைகள் சுற்றுசூழலுக்கும், மனிதர்களுக்கம் நண்பனாக இருக்க வேண்டும். அதற்கேற்றவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தற்காலிக முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு நிரந்தரமான இயற்கை வளங்களை மாசடையும் படியான செயல்பாட்டினை தொழிற் சாலைகள் அரங்கேற்றி வருவது கவலைக்குறிய செயலாக உள்ளது

### கவிதை

துள்ளி குதித்து விளையாடும் குழந்தைகள் நாங்கள்
பள்ளி கற்கும் வயதிலே
மனதில் ஆயிரம் ஆசைகளோடு
சிறகடித்து பறக்கும் பட்டாம் பூச்சிகளாய்
கண்களில் ஆயிரம் கனவுகளுடன்
எங்கள் லட்சியத்தை நோக்கி பயணிக்கின்றோம்!!



**R. ஸ்ரீகார்த்திகா**
7 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



# நானும் சமூக மாற்றமும்

என் பெயர் பேகம் !! நான் தண்டையார்பேட்டையில் வசித்து வருகிறேன்.

ஒரு ஆண்டிற்கு முன்பு அருணோதயா செயல்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட நான் ஒரு தன்னார்வலராக அருணோதயாவில் என்னை இணைத்துக் கொண்டேன். குழந்தை வளர்ப்பு உட்பட பல பயிற்சிகளை பெற்றேன். தற்சமயம் நான் களப்பணியாளராக இணைந்துள்ளேன்.

எனக்கு சமூக சேவை செய்வது என்பது மிகவும் பிடிக்கும் ஆதலால் நான் எஸ் எம் சி (SMC) மற்றும் சிபிசி (CPC) குழந்தைகள் பாதுகாப்புகுழு போன்ற சமூக அமைப்புகளில் என்னை ஈடுபடுத்திக் கொள்வேன். எனக்கு அது மிகவும் பிடித்தமான விஷயமாக இருந்தது.

ஆறு மாதங்களுக்கு முன்பு எனது ஏரியாவில் உள்ள குட்டையை தூர்வாரும் பணியில் நான் கலந்து கொண்டேன். இப்பணியை நான் சிறப்பாக செய்தேன். சிறிது நாள்களுக்கு பிறகு அந்த பணியை செய்தவர்களை அழைத்து மரியாதை செய்தனர். அந்த தூர்வாரிய குளத்திற்கு மேல் மரம் நட வேண்டும் என்றும் , முதல் மரத்தை நீங்கள் நட வேண்டும் என்று மாநகராட்சி அதிகாரிகள் கேட்டுக் கொண்டார்கள்.

நானும் அந்த முதல் மரத்தை கையில் வாங்கியவுடன் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஏனென்றால் மரம் என்பது ஒரு தலைமுறை மட்டுமின்றி நமக்கு பின்வரும் அடுத்த தலைமுறைக்கும் அது பயனளிக்கும் என்பதால் என்னால் அந்த தருணத்தை மறக்க முடியாது. அந்த நிமிடம் நான் பெற்ற சந்தோசத்தை அளவிட முடியாது.

இந்த சமூக சேவை பணியை புரியும் ஆர்வத்தை அருணோதயா மூலமாகவே நான் பெற்றேன். அதனால் இந்த நிமிடத்தில் அருணோதயா நிறுவனத்திற்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு சமூக சேவை செய்வதில் ஈடுபாடு அதிகமாக ஏற்பட்டது. இதனால் நான் என்னுடைய பகுதியில் வாழும் குழந்தைகள் மற்றும் மக்கள் இவர்கள் முன்னேற்றத்திற்காக நான் மிகவும் பாடுபடுவேன். முடிந்த அளவு மற்றவர்களும் சமூக மாற்றத்திற்காக நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி...வணக்கம்.

திருமதி. பேகம்
தண்டையார்பேட்டை



# மனசாட்சி

எனது பெயர் நிஷாந்த். நான் சிட்டெறும்பு பேசுது இதழின் இணை ஆசிரியர். நாங்கள் எங்கள் பகுதியை பற்றி எழுத வேண்டும் என்று முடிவெடுத்தவுடன் நான் முதலில் என் பகுதியை சுற்றிப் பார்க்க கிளம்பினேன். வாசலில் நின்று நாங்கள் குடியிருக்கும் அடுக்குமாடி வீட்டை கவனித்தேன். கட்டிடங்கள் உடைந்தும் படிக்கட்டுகள் இடிந்தும், சில பிளாக்கில் கழிவுநீர் குழாய்கள் உடைந்து கழிவுநீர் தேங்கி இருந்ததை கண்டேன். அங்கிருந்து சிறிது தூரம் நடந்தேன். அங்கு குப்பைகள் மூட்டை மூட்டையாக குவித்து வைக்கப்பட்டதை கண்டேன். அதில் கொசுக்கள் மொய்த்து கொண்டு இருந்தது. ஏன் இதையெல்லாம் யாரும் சரி செய்யவில்லை என்று என் மனதுக்குள் தோன்றியது.

K. நிஷாந்த்
10 ஆம் வகுப்பு, எண்ணூர்



மேலும் அமோனியா கசிவு ஏற்பட்ட கோரமண்டல் தொழிற்சாலையின் மதில் சுவருக்கு வெளியே இப்போதும் சல்ப்பர் கழிவுகள் கொட்டப்பட்டு வருகிறது.

மரம் செடிகொடிகள் கூட அழிந்து வரும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஏன் இந்த நிலை எனக்குள் கேள்வி?

எங்கள் பகுதியில் ஓடியதால் தான் என்னவோ கொற்றலை ஆறு கூட சுடுநீர் ஆறாக மாறியதோ?

என் முன்னோர்கள் என் பகுதியை குறித்து கூறியதற்கு மாறாக நான் காண்கின்றேன். இதில் என் பகுதி என்று பெருமையாக சொல்லிக் கொண்டு நான் எதை எழுதுவேன் என்ற சிந்தனையோடு வீட்டுக்கு திரும்பினேன்!!

# சிவப்பு எச்சரிக்கை பகுதி

சென்னை எண்ணூரில் மக்கள் ஏற்கனவே அவதியுற்றுவரும் நிலையில் அங்கு புதியதாக அனல் மின் நிலையம் அமைக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும். பருவநிலை மாற்றம் குறித்து அறிவியலாளர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

2016 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்தின் படி 1.5 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையை கடந்து விட்டால் பருவநிலை பேரழிவு எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது என்பது தான் சுற்றுச்சூழல் நிபுணர்கள் அறிவியல் அளவில் ஒருமித்த கருத்து. இதனை உலக நாடுகளின் அரசும் இலாபநோக்கில் செயல்படும் கார்ப்பரேட் நிறுவனங்களும் காது கொடுத்து கேட்காமல் இருந்தாலும் கூட பருவநிலை குறித்து, அடுத்த தலைமுறை குறித்து சிந்திக்க வேண்டிய பாதுகாக்க வேண்டிய தலையாய கடமை நமக்கு உள்ளது. இந்த சூழலில் மேலும் புதிதாக அனல் மின் நிலையம் அமைக்கத் தமிழ்நாடு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 2009 இல் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதியின் கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையில் புதிய சுற்றுச்சூழல் அனுமதி கோரியுள்ளது. இதற்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 2025 ஜனவரி 6-ம் தேதி அன்று நடைபெற்றது. ஏற்கனவே இரு பெரிய அனல்மின்நிலையங்கள், மூன்று துறைமுகங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்கள், உரத்தொழிற் சாலைகள், பாலிமர் மற்றும் ரசாயன ஆலைகள், வாகன தொழிற்சாலைகள் மிகப்பெரிய குப்பை கிடங்கு, நிலக்கரி சேமிப்பு கிடங்குகள், என சூழலை பாதிக்கும் தொழிற் சாலைகள் எண்ணூர் மற்றும் மணலி பகுதியில் அமைந்துள்ளது. எண்ணூர் மற்றும் அதனை சுற்றி வாழும் பகுதியில் மக்கள் பல்வேறு உடல் உபாதைகளால் கடுமையாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில், வாழத் தகுதியற்ற இடமாக வட சென்னை மாறி வருவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறி வருகின்றனர்.

இதனை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் அப்பகுதியில் மீண்டும் புதிதாக அனல் மின் நிலையம் கட்டுவது சுற்றுச் சூழலுக்கும் வடசென்னை மக்களுக்கும் செய்யும் மாபெரும் துரோகம் ஆகும். மும்பை டெல்லி, பெங்களூருவை விட சென்னையில்தான் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் காற்று மாசினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகமாக உள்ளன என சமீபத்தில் வெளியான c 4 0 ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி பூவுலகின் நண்பர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மீஞ்சூர், செம்பரம்பாக்கம், அத்திப்பட்டு, காட்டுக்குப்பம் ஆகிய அனல் மின் நிலையத்திலிருந்து அருகில் உள்ள பகுதியில் பி எம் 2.5 நூல் துகள்களின் அளவுகளாக உலக சுகாதார நிறுவனம் பாதுகாப்பான அளவாக நிர்ணயித்துள்ள அளவுகளை விட 8 மடங்கு அதிகமாக பதிவாகியுள்ளது என ஹெல்த் எனர்ஜி ஆய்வறிக்கையில் வாயிலாக தெரிய வருகிறது. எனவே எண்ணூர் பகுதியில் ஏற்கனவே அனல் மின்நிலையங்கள் இயங்கி வரும் நிலையில் அப்பகுதியில் மேலும் புதிதாக அனல் மின் நிலையம் அமைக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும் என்பது குழந்தைகளின் வேண்டுகோளாக உள்ளது.

S. நிவிஷிகா
6 ஆம் வகுப்பு, எண்ணூர்





## எங்கள் பகுதியும் நல்ல பகுதி தான்

எனது பகுதியின் பெயர் எண்ணூர் சுனாமி குடியிருப்பு. எங்கள் பகுதியை பற்றி கேட்டால் அந்த இடம் மோசமான இடம், அங்கு உள்ளவர்கள் எல்லாம் மோசமானவர்கள் என்று மற்றவர்கள் கூறும்போது எனக்கு மிகவும் கவலையாகவும், அவமானமாகவும் இருக்கும். ஏன் என்றால் நானும் அந்த பகுதியில் தான் வாழ்கின்றேன்.

என் பகுதியிலும் நல்ல விஷயங்கள் நடைபெறுகின்றது என்பதை சொல்ல வேண்டும் என்று நினைத்து கொண்டு இருந்தேன். இந்த சிட்டெறும்பு புத்தகத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி எங்கள் பகுதியை பற்றி நல்ல விசயங்களை நான் சொல்லப் போகின்றேன்.

இங்கு சண்டைகள், திருட்டு, கெட்ட வார்த்தையில் பேசி கொள்பவர்கள், வெட்டி கொள்பவர்கள், சிறுவர் மற்றும் சிறுமிகள் போதை பயன்படுத்துவது மற்றும் பள்ளிக்கு செல்லாமல் இருப்பது போன்றவர்கள் இருப்பது உண்டு.

ஆனால் இங்கு அது மட்டும் நடப்பது இல்லை நல்ல செயல்களும் நடைபெறுகின்றது. இங்கு மக்களுக்காக, குழந்தைகளுக்காக பணிபுரியும் தொண்டு நிறுவனங்கள் உள்ளன. இங்கு பள்ளிகளும் உள்ளன. அடுத்தவர்களுக்கு உதவும் மனம் உடையவர்கள் உள்ளனர். M - 5 காவல் நிலையம் உள்ளது. அங்கு குழந்தைகளுக்கும் நல்ல பாதுகாப்பு கொடுக்கும் காவலர்கள் உள்ளனர். குழந்தைகள் மீது அக்கறை கொண்ட பெற்றோர்களும் உள்ளனர். சிறுவர் மற்றும் சிறுமியர் மன்றம் உள்ளது. அங்கு நாங்கள் மகிழ்ச்சியாக உள்ளோம். எங்கள் அருணோதயாவின் குழந்தைகள் சங்கம் உள்ளது அதில் நாங்கள் பங்கேற்று எங்கள் உரிமைகளை பெற்றுள்ளோம்.

விரைவில் எங்கள் பகுதி நல்ல பகுதி என்று சொல்லுமளவிற்கு குழந்தைகள் அனைவரும் சேர்ந்து முயற்சிப்போம்.

**U. மகாலட்சுமி**
9 ஆம் வகுப்பு, எண்ணூர்



## கோயில் நகரம்

என் பெயர் மோனிஷா நான் திருவொற்றியூர் பகுதியில் வசித்து வருகின்றேன். திருவொற்றியூர் வடசென்னையின் முதன்மை பகுதியாக அமைந்துள்ளது. எனது பகுதியில் கோவில்கள் அதிகம் இருக்கும். அதனால் கோவில் நகரம் என்றும் அழைப்பர். பிரசித்தி பெற்ற வடியுடையம்மன் கோவில் எங்கள் பகுதியில் உள்ளது. மேலும் பட்டினத்தார் திருவொற்றியூரில் தான் உயிருடன் சமாதியானார் என்ற வரலாறு உள்ளது. அந்த சமாதி அடங்கிய கோவில் உள்ளது. இங்கு வாழும் மக்கள் தெய்வபக்தி அதிகம் உடையவர்களாக உள்ளனர். இப்பகுதியில் குழந்தைகள் கல்வி கற்க பள்ளிக்கூடங்கள் அதிகமாக உள்ளது. அரசு அலுவலகங்கள், மெட்ரோ தொடர் வண்டி நிலையங்கள் போன்றவை எங்கள் ஊரின் சிறப்பம்சமாக உள்ளது. ஒரு காலத்தில் பின் தங்கிய நகரமாக இருந்த திருவொற்றியூர் இப்போது முன்னேறி வருகின்றது.

ஆனால் சில பிரச்சனைகள் உள்ளது. CPCL தொழிற்சாலை மூலம் வெளியேற்றப்படும் கச்சா எண்ணெய் கழிவுகள் நிலத்தடி நீரையும், நிலத்தையும், காற்றையும் மாசுபடுத்தி வருகின்றது. அழகான எங்கள் பகுதியை மாசுபடுத்தி வரும் இந்த தொழிற்சாலையை அங்கிருந்து அகற்ற கோரிக்கைகள் கொடுத்துள்ளோம்.



**S. மோனிஷா**
11 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்

## புதிர்

1. **எனக்கு ஒற்றை கண் உண்டு. ஆனால் பார்க்க முடியாது நான் யார்?**
2. **நான் எப்போதும் ஓடுவேன். ஆனால் என்னால் நடக்க முடியாது நான் யார்?**
3. **என்னை ஒருமுறை பார்க்கலாம். ஆனால் மறுமுறை பார்க்க முடியாது நான் யார்?**
4. **கழுத்து உண்டு தலை இல்லை நான் யார்?**
5. **வீடில்லா நகரங்கள், நீரில்லா சமுத்திரங்கள் அது என்ன?**
6. **தாடிக்காரன் மீசைக்காரன் கோவிலுக்கு போனால் வெள்ளைக்காரன் அவன் யார்?**

விடைகள் 18 ஆம் பக்கம்

# எங்க ஏரியா !!

நான் கொருக்குப்பேட்டையில் உள்ள நேரு நகர் பகுதியில் வசிக்கிறேன். அதிக மக்கள் எங்கள் பகுதியில் வாழ்கிறார்கள். எங்கள் பகுதியில் பூங்கா உள்ளது. சமுதாய நலக்கூடம், அங்கன்வாடி, கோவில் மற்றும் தர்கா போன்றவை உள்ளது. எங்கள் பகுதியில் நிறைய சிறு தொழில் செய்கிறார்கள் பெண்கள் வீட்டில் சிறு தொழில் செய்கிறார்கள். ஏழை எளிய மக்கள் அனைவரும் சாப்பிடுவதற்கு அம்மா உணவகம் உள்ளது. குழந்தைகள் மாலை நேர வகுப்பிற்கு செல்கிறார்கள். குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்கிறார்கள். நேரு நகர் பகுதியில் ஒரு சின்ன மார்க்கெட் உள்ளது. எங்கள் பகுதியில் கிரிக்கெட் விளையாடுவேன். சைக்கிள் ஓட்டுவேன், நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவேன். குழந்தைகள் நல்ல ஒழுக்கத்துடன் இருக்க அருணோதயா குழந்தைகள் சங்கம் செயல்படுகிறது. நாங்கள் இதனால் எங்கள் பிரச்சனைக்கு தீர்வு காண முடிகிறது. நாங்கள் நிறைய வளங்கள் கொண்டு வாழ்கிறோம். எங்க பகுதியில் பிடிக்காதவை மழை அதிகம் பெய்தால் வெள்ளம் வந்துவிடும். நிறைய மக்கள் பாதிப்பு அடைவார்கள். பக்கிம்காம் கால்வாய் தூர் வாராமல் இருப்பதால் கொசு தொல்லை அதிகமாக உள்ளது. இதனால் நோய்கள் உண்டாகிறது. பள்ளிக்கு போகும் வழியில் ரயில்வே ட்ராக் உள்ளது. இதனால் பள்ளி செல்ல தாமதமாகிவிடும். எங்கள் பகுதியில் குப்பைமேடு உள்ளது. இதனால் ஏற்படும் துர்நாற்றம் நிறைய குழந்தைகளும் மற்றும் பெரியவர்களும் பாதிப்படைகின்றனர். இது எல்லாம் மாறினால் எங்கள் பகுதி நன்றாக இருக்கும்.




**H. மோகித்**
9 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை


## நான் பிறந்து வளர்ந்த இடம்

நான் கொருக்குப்பேட்டை பகுதி அண்ணா நகரில் வசிக்கிறேன். என் பகுதி எனக்கு ரொம்ப பிடிக்கும். நான் இங்கு தான் பிறந்தேன். எனது பகுதியில் பிடித்த விஷயங்கள் அழகான கோவில், நடுநிலைப்பள்ளி, மருத்துவமனை, அழகான சுற்றுச்சூழல், பொதுக் கழிப்பிடம் நியாய விலைக் கடை இவை அனைத்துமே எங்கள் பகுதியில் தான் உள்ளது. எங்கள் பகுதி எப்பவுமே திருவிழா போல கூட்டமாக காணப்படும். பகுதியில் நபர்கள் அனைவரும் நல்ல முறையில் பழகுவார்கள். பெரியவர், சிறியவர் என்று வேற்றுமை இல்லை. எந்த ஒரு பிரச்சனை இருந்தாலும் அனைவரும் ஒன்று சேர்ந்து தீர்வு காண்போம். அது மட்டும் இன்றி மழைக்காலங்களில் ஒரு சில பகுதிகளில் வெள்ளம் வந்தாலும் எங்கள் பகுதியில் மட்டும் மழை நீர் வராது. இதுவே எங்கள் பகுதியில் சிறப்பு அம்சமாக கருதுகிறேன். எனவே எனக்கு என் பகுதியை ரொம்ப பிடிக்கும்.



**K. சந்தோஷ்**
12 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை




# எனது பகுதி எனது உரிமை

எம்ஜிஆர் நகரில் நான் வசிக்கிறேன். என் பகுதியில் எங்கள் பூங்கா அழகாக உள்ளது. விடுமுறை நாட்களில் நாங்கள் ஒன்றாக சேர்ந்து அப்பூங்காவில் விளையாடுவோம்.

அது மட்டுமில்லாமல் மக்கள் காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சி செய்கின்றனர். எங்கள் தெருவில் அழகு மாரியம்மன் கோவில் உள்ளது, சேர்ந்து வணங்கி வருவோம். மனதுக்கு சந்தோசமாக இருக்கும். சர்ச ஆலயமும் உள்ளது. அங்கு எங்கள் நண்பர்களுடன் சென்று பிரேயர் பண்ணி வருவோம். என் பகுதி எனக்கு ரொம்ப பிடிக்கும், மகிழ்ச்சியாக உள்ளது .

எங்கள் பகுதியில் பிடிக்காத விஷயம் பூங்கா அருகில் போதைப் பொருள் விற்பனை செய்கிறார்கள். அதைத் தடை செய்ய வேண்டும். எம்ஜிஆர் நகர், நேரு நகர் இணையும் பாலத்தில் பாதுகாப்பில் காவல்துறையினர் உள்ளனர். அதையும் மீறி போதைப் பொருள் விற்பனை நடைபெறுகிறது. அதை தடை செய்தால் நன்றாக இருக்கும். மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி உள்ளது, அதனால் கொசு தொல்லை அதிகமாக உள்ளது. ஏரியா பள்ளமாக உள்ளது. மழைநீர் தேங்காமல் இதை சரி செய்து கொடுத்தால் எங்கள் பகுதி இன்னும் அழகாக இருக்கும்.

**K. சந்தியா**
11 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



## பாதுகாப்பாக வாழ எங்களுக்கு உரிமை உண்டு

இரயில்வே காலனி பகுதியில் இரயில் நிலையம் அருகில் என் வீடு உள்ளது எப்பொழுதும் இரயிலின் சத்தம் கேட்டு கொண்டே இருக்கும். இரவு நேரம் முழுவதும் இரயிலின் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அருகில் கடைகள் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். எங்கள் பகுதியில் இரவு நேரத்தில் வெளிவருவது கடினமாக உள்ளது. போதைப் பழக்கம் அதிகமாக உள்ளது. எங்கள் பகுதியில் இரவு நேரத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இருப்பதே இல்லை. எங்கள் அப்பா அம்மா தின கூலி வருமானம் தான். அதை வைத்து தான் நாங்கள் தினமும் அன்றாட வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கின்றோம். பள்ளிக்கு செல்வதில் கூட நாங்கள் மிக சிரமம் தான் படுகின்றோம். குழந்தைகளுக்கு வாழும் உரிமை, வளரும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் பங்கேற்கும் உரிமை உண்டு என்று ஐ. நா. சபையின் குழந்தைகள் உரிமையின் மீதான உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதில் இந்தியாவும் கையொப்பம் இட்டு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் எங்களை போன்று இன்னும் நிறைய குழந்தைகள் அடிப்படை வசதியின்றி அவர்களின் உரிமைகளை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும், குழந்தைகள் அனைவரும் அவர்கள் உரிமையை பெற வேண்டும்.

**P. தேன்மொழி**
கல்லூரி முதலாம் ஆண்டு, கொருக்குப்பேட்டை



### ஜே ஜே நகர், குழந்தைகள் சங்க குழந்தைகளின் எதிர்பார்ப்புகள்

- வீடு சரியான வசதி இல்லாமல் இருக்கிறது.
- எங்களுடைய பகுதியில் மின்சார வசதி இல்லை.
- குழந்தைகள் விளையாடுவதற்கு பூங்கா இல்லை
- பொதுக்கழிப்பறை வசதி இல்லை
- குடிப்பதற்கு நீர் வசதி இல்லை
- தெரு விளக்கு வசதி இல்லை
- இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் போதை பழக்கத்திற்கு ஆளாகி உள்ளனர்.

**அ. சஞ்சய்**
8 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



### புதிர்கான விடைகள்

1. **ஊசி**
2. **நதி**
3. **கடந்த காலம்**
4. **தண்ணீர் கேன்**
5. **வரைப்படம்**
6. **தேங்காய்**

# நாங்களும் முன்னேறுவோம்

நான் பிறந்தது கொருக்குபேட்டை கோபால் நகர் பகுதி தான். முதலில் இந்த பகுதி குடிசை பகுதியாக இருந்தது. மக்கள் தொகையும் குறைவாக இருந்தது. வாழ்வாதாரம் குறைவு, கழிவு நீர், குடிநீர் வசதி இல்லாமல் இருந்தது. மிகவும் தாழ்வான பகுதியாக இருந்தது. மழை நீர் தேங்கி குட்டையாக நிற்கும், மக்கள் மீன் பிடித்து விற்பனை செய்வார்கள். காலம் மாற மாற தண்ணீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு வந்தது. மக்கள் தொகை அதிகமாகி உள்ளது. குடிசை இல்லாமல் மாடி வீடுகளாகவே இருக்கின்றன. முதலில் இங்கு நிறைய குழந்தைகள் மரப்பட்டரைகளில் வேலை பார்த்து வந்தனர். அருணோதயா மூலம் விழிப்புணர்வு கொடுக்கப்பட்டு குழந்தைகள் வேலை செய்வதை நிறுத்தி பள்ளி செல்கின்றனர். இப்போது இங்கு வாழும் குழந்தைகள் அனைவரும் படிக்கின்றோம். எங்கள் பகுதி இரயில்வே தண்டவாளம் அருகே உள்ளது. அங்கு இரவில் மதுபோதை போன்றவற்றை பயன்படுத்திவிட்டு கொலை கொள்ளை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்த பிரச்னை எல்லாம் இல்லாமல் எங்கள் பகுதி பாதுகாப்பான பகுதியாக மாற்ற எங்கள் குழந்தைகள் சங்கத்தின் மூலம் நகரசபை கூட்டம் நடத்தி கோரிக்கைகள் கொடுத்துள்ளோம். விரைவில் இந்த நிலைமாற வேண்டும்.



**G. லட்சுமிபிரியா**
9 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

## பாடல்

**மாற்றம் வருது மாற்றம் வருது !**
**நகரசபையாலே மாற்றம் வருது!**
**குழந்தையெல்லாம் ஒண்ணா சேர்ந்து**
**பகுதியைத் தான் மாற்றிடுவோம்!**
**மாற்றம் வருது மாற்றம் வருது- (2)**

**சேறு பாரு..சேறுபாரு..**
**கால்வாயில் சேறு பாரு**
**கால்வாய் குள்ள குப்பைபாரு**
**குப்பைமேல கொசுவைபாரு**
**கொசுவை எல்லாம் விரட்டிடுவோம்!**
**கொசு மருத்து அடித்திடுவோம் !**

**மாற்றம் வருது மாற்றம் வருது (2)**

**பங்கேற்போம் ! பங்கேற்போம் !**
**அரசு ஆளுகையில் பங்கேற்போம்!**
**நம் உரிமைகளை அடைந்திடுவோம்!**
**எடுத்து காட்டாய் வாழ்த்திடுவோம்!**
**நாம் எடுத்து காட்டாய் வாழ்ந்திடுவோம்.**

**மாற்றம் வருது மாற்றம் வருது(2)**

**P. பூபதி**
7 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை




## பழங்குடியினத்தவரின் பாரம்பரிய மழைப் பாடல்

**வாலியிலே மாக்கரச்சு**
**வாசலெல்லாம் கோலம் போட்டு**
**கோலம் கரையவில்லை**
**கொள்ளை மழை பெய்யவில்லை**
**தந்தனதானே..**

**பானையிலே மாக்கரச்சு**
**பாதையெல்லாம் கோலம் போட்டு**
**கோலம் கரையவில்லை**
**கொள்ளை மழை பெய்யவில்லை**
**தந்தனதானே..**
**மண்ணுவறண்டும்-நம்**
**மாரியாத்தா இறங்கலையே**
**வாடிகளா பெண்டுகளே–நாம்**
**வனவாசம் சென்றிடுவோம்**
**தந்தனதானே..**
**சிட்டுபோல மின்னிமின்னி**
**சீமையெங்கும் பெய்யுது–ஆமா**
**சீமையெங்கும் பெய்த மழை**
**நம்மூர்ல பெய்யவில்லை...**
**தந்தனதானே..**

**R. எஸ்தர்**
8 ஆம் வகுப்பு, எண்ணூர்












**உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்**
**வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்**